மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 59/2017 நாள்– 19.08.2024

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.4 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. K.மாரிராஜா, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– விஜயராஜ்(வா.சா.4) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு வழங்ககூடிய அதிகார கடிதம் வா.சா.ஆ.38 ஆகும். பட்டாசு தொழிற்சாலைக்கு உரிமம் வழங்கும் பிரிவில் நான் பணிபுரிகிறேன். ராஜலட்சுமி பட்டாசு ஆலை சம்மந்தமாக உரிய ஆவணங்கள் கொடுத்துள்ளார்கள். தனியாக பாதை இருந்ததால் தான் மெயின் ரோட்டிலிருந்து பட்டாசு ஆலை வரை செல்ல முடியும். ராஜலட்சுமி பட்டாசு ஆலை உரிமையாளர்கள் அந்த பட்டாசு ஆலைக்கு சென்று வருவதற்காக பாதை வைத்துள்ளார்கள், அது அரசு பாதையாக கூட இருக்கலாம். கிராம கணக்கில் அது வண்டிபாதை என்று உட்பிரிவு செய்யப்பட்டிருக்கும். மனுதாரரின் விண்ணப்ப கடித நகல் வா.சா.ஆ.39 ஆகும். உரிமம் கோருவதற்கான படிவங்கள் வா.சா.ஆ.40 ஆகும். சாத்தூர் வருவாய் கோட்டாசியரின் அறிக்கை வா.சா.ஆ.41 ஆகும். திருமதி.கருப்பாயம்மாள் என்பவரின் ஆட்சேபனை மனு வா.சா.ஆ.42 ஆகும். சீனிவாசன் என்பவரின் ஆட்சேபனை மனு வா.சா.ஆ.43 ஆகும். புல எண்.35 மற்றும் 36க்கான பட்டா நகல் வா.சா.ஆ.44 ஆகும். கம்பெனி பதிவு விண்ணப்ப ஆவணம் நகல் வா.சா.ஆ.45 ஆகும். கம்பெனிக்குரிய அதிகாரம் மற்றும் ஒப்புதல் கடிதம் நகல் வா.சா.ஆ.46 ஆகும். சர்வே மேனுவல் மாறுவதற்கு வாய்ப்பு உண்டா என்றால் பயன்பாட்டை பொறுத்து நீளம், அகலம் மாறும். சர்வே மேனுவல் படி அந்த பாதை 8 அடி அகலம் உள்ளது. அது காலம் காலமாக மக்களால் பயன்படுத்தப்பட்ட

பாதையாகும். அது மண்பாதையாகும். ஆனால் பஞ்சாயத்தில் தீர்மானம் ஏற்படுத்தப்பட்ட ரோடு போட முடியும்.

1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

வா.சா.ஆ.38 முதல் 46 ஆவணங்களை நன்கு பரிசீலினை செய்து தான் ராஜலட்சுமி பயர் ஓர்க்ஸிற்கு அனுமதி வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

8 ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

அரசு மேல்நிலைபள்ளியில் தொடங்கி மங்கம்மாள் கோவிலில் முடிவடையும் தாவா சொத்திற்குரிய சர்வே எண்கள்.13/4, 12/4, 14/2, 15/5, 16/2, 17/1, 35/3 என்றால் சரிதான். வண்டிபாதை அகலம் 8 அடி என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் ஒரு மாட்டு வண்டி செல்லும் அளவு 8 அடியாகும். அதன் அடிப்படையில் சொல்கிறேன். அந்த அளவையும் விட அகலமாகவும் இருக்கலாம் என்றால் இருக்கலாம். நில சீர்திருத்த ஆணையரின் உத்தரவுக்கு பின்னிட்டு தான் தாவா வண்டி பாதை சம்மந்தமான பரிகாரத்தை நீதிமன்றத்தில் போட முடியும் என்றால் சரிதான்.

7 ம் பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

வண்டிபாதை சர்வே எண்.14/2 என உட்பிரிவாகி 35 ஆண்டு காலமாக வண்டிபாதையாக பொது மக்களின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த வண்டிபாதையில் தான் சர்வே எண்கள்.13, 12, 14, 15, 16, 17, 39, 35 உள்ளது என்றால் சரிதான். அந்த வண்டிபாதை வழியாகதான் ராஜலட்சுமி பயர் ஓர்க்ஸிற்கு போக முடியும் என்றால் சரிதான். வண்டிபாதையை ராஜலட்சுமி பயர் ஓர்க்ஸ்கு பயன்படுத்துவதற்கு எல்லா உரிமையும் உள்ளது என்றால் சரிதான்.

வாதி தரப்பில் மறுவிசாரணை

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், ஸ்தலத்தில் போய் பார்வையிடவில்லை என்றால் சரிதான். வருவாய் துறை ஆவணங்களின் படி அந்த வண்டி பாதை பள்ளிக்கூட வளாகம் வழியாக தான் செல்கிறது என்றால் ஸ்தலத்தில் போய் பார்த்தால் தான் தெரியும்.

மறுவிசாரணை – இல்லை.